உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 13 புதன்கிழமை (26 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 60

# அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் நடத்த அரசிடம் முக்கியஸ்தர்கள் வலியுறுத்து

## யோசனைகள் சிலவும் முன்வைப்பு

கொழும்பு, ஜனவரி 26

வடக்கு - கிழக்குப் பிரச்சினையை இராணுவத் தீர்வின் மூலம் ஒரு போதும் முடிவுக்குக் கொண்டு வர முடியாது,

ஆகையால் அரசாங்கம் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

அமைதித் தீர்வு ஒன்றைக் காண்பதன் மூலமே விடுதலைப் புலிகளை பிரதான நீரோட்டத்தில் பங்கேற்கச் செய்யமுடியும்,

இவ்வாறு மிக உயர்மட்ட அதிகாரிகள், கல்விமான்கள், ஓய்வு பெற்ற அரச அதிகாரிகள் அடங்கிய முக்கியஸ்தர்கள் குழு ஒன்று அரசாங்கத்திடம் வலியுறுத்தி உள்ளது.

இந்த முக்கியஸ்தர்கள் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு உதவக் கூடிய சில யோசனைகளையும் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

''வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான யோசனைகள்'' என்ற தலைப்பிட்டு, உத்தேச யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாம்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முழுதாகவோ அல்லது பிரதானமாகவோ இராணுவத் தீர்வை நம்பியுள்ள மூலோபாயத்தின் மூலம் அதனை முடிவுக்குக் கொண்டுவர முடியாது—

விடுதலைப் புலிகள் இயக்

(3ஆம் பக்கம் பார்க்க)

## தரைக்கண்ணிகளை எதிர்த்து செயற்படும் வாகனங்கள்

### கொள்வனவு செய்ய ஆலோசனை

தரைக்கண்ணிகளை எதிர்த்துச் செயற்படும் விசேட வாகனங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இராணுவம் தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி சண்டே ஐலண்ட் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

''விடுதலைப் புலிகளின் தரைக்கண்ணி யுத்த முறையால் இராணுவம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது அரச படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் பலவிதமான கண்ணிகளைப் பயன் படுத்தி வருகின்றனர்.

இராணுவத்தின் ரி 55 ரக செக் போர் டாங்கிகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் விசேட போர் டாங்கி எதிர்ப்புப் பிரிவு ஒன்றைப் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான வெவ்வேறு தாக்குதல்களில் இராணுவம் நான்கு ரி 55 செக் போர் டாங்கிகளை இழந்தது.

வன்னிப் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளுக்கு உள்ள வசதிகளை வெற்றிகரமாக அழிப்பதன் மூலமே பூரண இராணுவ வெற்றியை அடைய முடியும் என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை—

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆக்ரோஷமான யுத்தக் கொள்கை ஒன்றைக் கையாள வேண்டும் என்று படைகள் கோரியுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தரைநிலை உகந்ததாக இருக்கும் போது நீண்ட காலத் தாக்குதல் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

## மணலாற்றில் குண்டுவீச்சு

நேற்றுக் காலை 11 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு புக்காரா விமானங்களும், இரு சியாமாசெட்டி விமானங்களும் மணலாற்றுப் பகுதியில் மாறி மாறி குண்டுவீச்சு நடத்தின.

குடியிருப்புப் பகுதிகளில் இடம்பெற்ற இக்குண்டுவீச்சின் போது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றதால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது.

இத்தாக்குதலில் பயன்தரும் மரங்கள் முறிந்ததுடன் கால்நடைகள் பலவும் உயிரிழந்தன. (இ-3)

## வடக்கு - கிழக்கு நிலைமை:

### முன்னாள் தளபதிகள் ஐவர் கூடி ஆராய்வர்

வடக்கு—கிழக்கு நிலவரம் பற்றி முன்னாள் படைத் தளபதிகள் ஐவர் அடுத்த மாதம் 6 ஆம் திகதி கூடி ஆராயவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

லெப். ஜெனரல் டெனிஸ் பெரேரா, ரியர் அட்மிரல் பேசில் குணசேகரா, ரியர் அட்மிரல் அல்பிரட் பெரேரா, எயர்வைஸ் மார்ஷல் படி மெண்டிஸ், எயர்வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக ஆகியோரே இவர்கள் ஆவர்.

இந்த முன்னாள் தளபதிகள் குழு ஏற்கனவே ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து இருந்தது

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த சிபார்சுகளில் சிலவற்றை அரசு அமுல் செய்திருப்பதாக குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும் — எதிர்க்கட்சித் தலைவரும் அங்கம் வகிக்கக் கூடியதான யுத்தக்கவுன்ஸில் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற சிபார்சை ஏற்க முடியாது என்று அரசு அறிவித்து விட்டது. [இ-எ]

## வாதுவவில் பொருட்கள் இறக்கும் வேலை ஆரம்பம்

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ''வாதுவ'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடன் ஆரம்பமாகின.

ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் கூடுதலான பொருள்களை இக்கப்பலில் எடுத்து வந்துள்ளனர்;

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட வைத்திய உபகரணங்கள் இன்று இறக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது

தொண்டர் அமைப்புகளுக்கும் இக்கப்பலில் பொருள்கள் வந்துள்ளன

இக்கப்பலில் கூடுதலான சைக்கிள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-3-173-162-17)

## முச்சந்தி முரளி



எல்லோரும் வருகினம் போகினம் ஆனால் சமாதானம் தான் வருகுதில்லை பாருங்கோ.....!

## தபால்கள் வெள்ளியன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 25

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'வாதுவ' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ள 768 தபால் பொதிகளும் இன்று கப்பலில் இருந்து இறக்கப்படும் என்றும் —

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் தபால் விநியோகம் செய்யப்படும் என்றும் — தபாலக அதிகாரி தெரிவித்தார்.

(இ-15 162-173-17-3)

## ஐ. நா. அதிகாரி புலிகளுடன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரக பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலெஸ் இன்று காலை விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார்.

## படையினரின் மிதிவெடியில் சிக்கிய குருநகர் மீனவர்

குருநகர், ஜன. 26

குருநகரில் இருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் படையினரின் மிதிவெடியில் சிக்கிக் காயம் அடைந்த சம்பவம் திங்கள் இரவு பூநகரி, பெரியவேலிப் பகுதியில் இடம் பெற்றது.

குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த வின்சற் கோன் சந்திராக்குட்டி (வயது 19) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

சம்பவதினம் இவரும் மற்றும் சில மீனவர்களும் பூநகரி பெரியவேலிப் பகுதியில் கரை இறங்கி தங்கி நின்ற சமயம் இந்த சம்பவம் இடம் பெற்றது.

காயம் அடைந்தவரை மீட்டு வரும் முயற்சியில் நேற்று இவரது உறவினர்கள் ஈடுபட்டிருந்தனர். (இ-15)

## மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணம் வெள்ளாந் தெருவில் உள்ள கராஜ் ஒன்றில் நேற்று மாலை வெல்டிங் வேலைக்கு பயன்படுத்தும் 'காஸ் லாம்பு' வெடித்து தீப்பற்றியதில் மூவர் காயமடைந்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மார்க்கஸ் பெர்னாண்டோ நேற்று காங்கேசன் - இளவாலை விஜயம்

### இன்று வாதுவ மூலம் பருத்தித்துறை வருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 26

இலங்கை கத்தோலிக்க திருச்சபை அதிமேற்றிராணியார் அதி. வண. நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையிலான குழுவினர் நேற்று காங்கேசன்துறை, இளவாலைப் பகுதிகளுக்கு விஜயம் செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர் என்று யாழ்ப்பாணத்துக்கு தகவல் கிடைத்தது.

நேற்று பலாலிக்கு விமான மூலம் வந்து சேர்ந்த ஆயரும், திருமலை மட்டக்களப்பு மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, இலங்கை துறவற சபைத் தலைவர் வண. பிதா அலெக்சான்டர் ஆகியோரும் காங்கேசன் துறை, இளவாலை விஜயங்களை முடித்துக் கொண்டு இன்று காலை 'வாதுவ' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து சேர்வர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் பங்குபற்றும் நிகழ்ச்சி விவரம் இன்று வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டது.

(இ-3-173)

## மெதடிஸ்த பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் வடக்கே வரும்

யாழ்ப்பாணம், ஜன. 26

மெதடிஸ்த திருச்சபையின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழு ஒன்று அடுத்த வார முற்பகுதியில் வடக்கே வரவிருக்கிறது.

யாழ்ப்பாணம் வரும் பிரதிநிதிகள் குழுவில் 15 பேர் வரை இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது

மெதடிஸ்த திருச்சபையின் முன்னாள் தலைவர்களான வண. சோமா பெரேரா, வண. ஹரல்ட் பெர்னாண்டோ மற்றும் பல போதகர்கள் இக்குழுவில் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

குழுவினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து புறப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

வண சோமா பெரேரா தலைமையிலான மெதடிஸ்த குழுவினர் முன்னரும் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் பேச்சு நடத்திச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## 'இலங்கையின் மூன்றாவது உலகம் யாழ்ப்பாணம்'

''யாழ்ப்பாணம் ஸ்ரீலங்காவில் மூன்றாவது உலகமாக உள்ளது''

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. டொமினிக் டு போர் மேற் கண்டவாறு வர்ணித்துள்ளார்.

''சண்டே ரைம்ஸ்'' வார இதழுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் இடத்து கடந்த 10 ஆண்டு காலமாக யாழ்ப்பாணம் பல வழிகளிலும் பின் தங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் எமக்கு ஒரு அலுவலகம் உள்ளது.

அங்கு நாம் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் —

அவர்களுக்கு ஆதரவு வழங்குவதாகவும் — தப்பபிப்பிராயம் நிலவுகிறது.

ஆனால நாம் அவ்வாறு நடக்கவில்லை. பக்க சார்பின்றியே நாம் செயல்படுகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## தமிழ்க் கூலிப்படையினருக்கு அரசபடையை விட அதிகபணம்

கொழும்பு, ஜன. 26

சிங்கள அரச படைகளுக்கு வழங்கப்படுவதிலும் பார்க்க கூடுதல் பணத்தை உதவித் தொகையாக தமிழ்க் கூலிப்படைகள் அரசாங்கத்திடமிருந்து பெறுகின்றன.

தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமார் பொன்னம்பலம் சண்டே ரைம்ஸுக்கு எழுதிய கடிதத்தில் முன் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளை தேடிப் பிடிக்கின்றோம் என்ற பேரில் அரசுக்கு ஆதரவான இத்தமிழ்க் குழுக்கள் கடத்தல், கொலை செய்வது, மிரட்டி பணத்தை பறிப்பது ஆகியவற்றில் கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் தமிழ் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். தளகர்த்தர் என்ற முறையில் ஜனாதிபதிக்கு இது தெரியும். அவர் அதனை பொறுத்துக் கொள்ளத் தயாரக உள்ளார்.

இதனை எந்த வகை பயங்கரவாதம் என்று ஜனாதிபதி அழைப்பார்? இப்படியான குழுக்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதன் நோக்கம் என்ன? தனது வீட்டுக்கு அருகில் உள்ள இந்த பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஏன் ஜனாதிபதி முன் வரவில்லை.

இக்குழுக்கள் இயங்கும் போது சட்டபூர்வமான அரசியல் நடவடிக்கைகளில் ஏனைய தமிழ்க் கட்சிகள் ஈடுபடுவது சாத்தியமானதா?

— இப்படி திரு. குமார் பொன்னம்பலம் கேட்டிருக்கிறார். (இ-எ)

## செஞ்சிலுவை அதிகாரிகளுடன் புலிகள் பிரதிநிதிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 26

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி திரு. பிலிப் கொன்ரசா, இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. டொமினிக்டுபோர் ஆகியோர் நேற்று மாலை விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் இருமணி நேரம் பேச்சுக்கள் நடத்தினார்கள்.

இப்பேச்சுக்களின் போது யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. செற்றிக் பிரலாவும் கலந்துகொண்டார்.

விடுதலைப்புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கலந்து கொண்டார்.

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு வலயத்தில் நடக்கும் விமானத்தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்கள் என்பவற்றின் மூலம் ஸ்ரீலங்கா அரச படைகள் புரிந்து வரும் அத்துமீறல்கள் குறித்து இப்பேச்சின் போது ஆராயப்பட்டது,

இப்பிரச்சினை பற்றி நேரில் கண்டறிய இங்கு வந்த திரு. பிலிப் கொன்ரசா, தாம் கொழும்பில் ஸ்ரீலங்கா அரச உயர் மட்டத்தில் இது தொடர்பாக பேசவிருப்பதாகத் தெரிவித்தார். (இ-3)

## காமினி கட்சியைச் சேர்ந்த 17 பேரும் சந்திரிகாவுக்கு எதிராக வாக்களிப்பர்!

### நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இவ்வாரம் கையொப்பம்

கொழும்பு, ஜன. 26

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவுக்கு எதிராக கொண்டு வரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மேல் மாகாணசபையில் உள்ள 17 ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களும் இவ்வாரம் கையொப்பமிடுவர்.

''சண்டே ஒப்சேவர்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

41 ஐ. தே. க. உறுப்பினர்களும் அப்பிரேரணையில் கையெழுத்திட்டவுடன் 58 உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் அப்பிரேரணை மேல் மாகாண ஆளுநர் எஸ். சர்வானந்தாவிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாண சபையின் கட்சிகளில் பலம் வருமாறு:

| | | |
|---|---|---|
| மொத்த ஆசனங்கள் | — | 104 |
| ஐ. தே. க. | — | 41 |
| பொதுமக்கள் முன்னணி | — | 45 |
| ஜ. ஐ. தே. மு. | — | 17 |
| முஸ்லீம் காங்கிரஸ் | — | 1 |

(இ-எ)

## தென் மாகாண சபை:

### நான்கு அரசியல் கட்சிகள் 1 சுயேச்சைக்குழு போட்டி

கொழும்பு, ஜன. 26

தென் மாகாண சபைத் தேர்தலில் 4 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக்குழுவும் போட்டியிடுகின்றன.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்வது நேற்று முடிவடைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி, பொதுமக்கள் முன்னணி, நவசமசமாஜக்கட்சி ஆகியன தென் மாகாணத்தில் உள்ள காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் போட்டியிடுகின்றன.

சிங்கள பூமிபுத்ர கட்சி காலி மாவட்டத்தில் மட்டும் போட்டியிடுகிறது. சுயேச்சைக்குழு ஒன்று அம்பாந்தோட்டையில் மட்டும் போட்டியிடும்.

காலி மாவட்டத்தில் போட்டியிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பித்த வேட்புமனு, தேர்தல் சட்டத்துக்கு அமைவாக இல்லாததால் நிராகரிக்கப்பட்டது.

மாகாண சபையின் 53 ஆசனங்களுக்கு 228 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காவேரி சீயாக்காய்

பேனின் கொடுமையில் இருந்து உங்கள் பெண்ணை அன்புடன் பராமரியுங்கள். உங்கள் குழந்தையின் வாழ்வில் இனிமையும் மகிழ்ச்சியும் மலரச் செய்யுங்கள். காவேரி பேன்களை ஒழிக்க உருவாகிய மூலிகையடங்கிய பவுடர்.

(29083)

### தவறிவிட்டது

24-01-94 திங்கட்கிழமை காலை 9-30 மணி அளவில் சங்கானையில் இருந்து யாழ். நகர் பயணம் செய்யும்போது பேர்ஸுடன் இரு காசோலைகளும், ஒரு தொகை பணமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் கையளிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: செ. சிவஞானம், ராஜராஜேஸ்வரன் ஸ்ரோர்ஸ், மெயின் வீதி, சங்கானை.

(29094)

செல்லமுத்து சிவஞானம் அவர்களது தேசிய அடையாள அட்டையும், இலங்கை வங்கி ஒய்வூதிய அடையாள அட்டையும் வெள்ளிக்கிழமை 21-01-94 அன்று இரவு ஆலங்கேணியில் இருந்து கிளாலி ஊடாக யாழ்நகர் பயணத்தின்போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். ந. சச்சிதானந்தம், இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(29095)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்களேன்! தினமும் முற்பகல் 8-30 — 12-30 பிற்பகல் 3-00—6-00 த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (29096)

### மிருதங்கம்

N. C. O. M S. பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க வேலைகள் விரைவில் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(29089)

### திறப்பு விழா

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்திருக்கும் திருமறை இல்லத்தில் சிறுவர் இல்லம் ஒன்றின் திறப்பு விழா கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது.

அருட்திரு ஏ. ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் இல்லத்தைத் திறந்து வைத்தார். (க-161)

## பதவி வெற்றிடம்

வடபகுதிக்கு வெளியேயும் கிளைகளைக் கொண்டு யாழ். நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- நிர்வாக அதிகாரி
- விற்பனை முகாமையாளர்
- அந்தரங்கச் செயலாளர்
- கணக்கியல் உதவியாளர்
- விற்பனையாளர்
- பயிலுநர்கள்
- அலுவல்கள் உதவியாட்கள் (Peon)

பதவிகட்கு ஏற்ற அதிஉயர் தகமை, சேவை, முன் அனுபவம் உடைய 45 வயதிற்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி **05 - 02 - 1994**

இல: 596, C/o உதயன்,
யாழ்ப்பாணம்.

(29080)

## கண்ணீர் அஞ்சலி

22-01-94 சனியன்று அகாலமரணமடைந்த எமது பாடசாலை மாணவன்

### செல்வராசா பிரசாந்

அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள். மாணவர்கள்.
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

(29102)

## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் வாடகைச் சேவையில் ஈடுபடும் மோட்டார்கார் உரிமையாளர்கள் அனைவரும் தமது வாகனத்தை யாழ் மாவட்ட மோட்டார்கார் சங்கத்தில் (யாழ் மத்திய பஸ்நிலைய அருகாமை) எதிர்வரும் 31-01-94ற்கு முன்னர் பதிவுசெய்து அதற்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

முன்பு பதிவு செய்து த. மோ. வா. பதிவு இலக்கத்தை பதிவுசெய்யாதவர்கள் மேற்படி சங்கத்தில் அவ்விலக்கத்தினை பதிவுசெய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்,
யாழ். மாவட்ட
மோட்டார்கார் சேவைச் சங்கம்.

[29106]

## CENTRE FOR PERFORMING ARTS
## திருமறைக் கலாமன்றம்

### புதிய மாணவரைச் சேர்த்தல் - 1994

**1. நாடகப் பயிலகம்**

நாடகம் தொடர்பான அடிப்படைகளைக் கொண்ட இப்பயிற்சி நெறி நாடகம்/அரங்கியல் கற்கும் மாணவர்க்கும் பயனுள்ளது.

(வயதெல்லை கிடையாது)

**2. சிறுவர் கலைக்கூடம்**

சிறுவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்கும் இப்பயிற்சி நெறியில் 12 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளலாம்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப நிறைவு திகதி: **31-01-94**

படிவங்களை அலுவலகத்தில் பெறலாம்.

வெ யூ. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலாளர்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7129]

## சித்திரத் தேருக்குப் பவளக்கால் நடும் விழா

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலயத்துக்கு அராலி கிழக்கு ஆச்சாரி சின்னத்தம்பி அமரசிங்கம் ஸ்தபதி அவர்களால் வெகு சிறப்பாக நிர்மாணிக்கப்படும் சித்திரத் தேருக்கான பவளக்கால் நாட்டு விழா 27-1-94 வியாழன் தைப்பூசத் தினத்தன்று காலை 7 மணியின் மேல்வரும் சுபவேளையில் நடைபெறும்

(6784) நிர்வாக சபையினர்.

உ
சிவமயம்

மெய்கண்ட தேவர் ஆதீனம்

## சி வ. ஞானசேவையகம்

480, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(யாழ். இந்து மைதானச் சந்தி)

நாளை தைப்பூசம் 27-01-94 வியாழன் முதல் தினசரி இலவச சேவை நிகழும்.

(29093)

## எமது புதிய வெளியீடுகள்

✲ சத்யராஜ் ✲ சுஜாதா ✲ கஸ்தூரி

**அமைதிப் படை**

✲ விஜயசாந்த் ✲ மீனா ✲ கவுண்டமணி

**சேதுபதி I. P. S.**

இந்த இரண்டு படங்களை நல்ல பிரதிகளில் பதிவு செய்து கொள்ள எங்களுடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் புதிய படங்கள் யாவும் புத்தம் புதிய கசெட்டில் பதிவுசெய்து வாடகைக்கு கொடுக்கின்றோம் என்பதை நினைவில் வைத்திருக்கவும், புதிய படங்களை நல்ல பிரதிகளில் பெற்றுக்கொள்ள நம்மை நாடுங்கள்.

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7049)

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI

முழுநேரப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

### 1. TECHNICIAN DIPLOMA COURSES (English Medium)

(i) Civil Engineering & Quantity Surveying — 2 years

**Educational qualification:**
G. C. E. (O/L) - minimum six subjects- including Maths - C; Science - C; English - S

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) - குறைந்த பட்சம் 6 பாடங்கள்; கணிதம் - C, விஞ்ஞானம் - C. ஆங்கிலம் - S; உட்பட

### 2. DIPLOMA COURSES

(i) Draughtsmanship - Civil
(ii) Computer programming & Data processing (Basic Cobol & d Base III+)
Practicals on IBI - PCAT & MAT 386 Industrial-controller.

**Educational qualification:**
G. C. E. (O/L)- minimum six subjects with credit for maths

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) - குறைந்த பட்சம் 6 பாடங்கள்; கணிதம் - C உட்பட

(iii) Advanced Diploma in Computing - (Syllabus includes British computer society & Australian computer society) — 1 Year.

**Educational qualification:**
G. C. E. (O/L) — minimum six subjects with Maths - C & English - S
G. C. E. (A/L) - minimum one Subject.

### 3. TECHNICIAN CERTIFICATE COURSES

(i) Air - conditioning & Refrigeration — 1½ Years
(ii) Radio & T. V Servicing — 1 Year
(iii) Automobile Technology — 1 Year

**Educational qualification:**
G. C. E (O/L) with Maths - S & Science - S

கல்வித் தகைமை:
G. C. E (O/L) — கணிதம் - S; விஞ்ஞானம் - S

### 4. CRAFT CERTIFICATE- COURSES (தமிழ்மொழி மூலம்)

(i) Machine shop Practice — 1 Year
இயந்திரப் பட்டறைப் பயிற்சி — ஒரு வருடம்
(ii) Electrical Wiring & Installation Practice — 1 Year
மின்னிணைப்புப் பயிற்சி — ஒரு வருடம்
(iii) Welding Practice — 1 Year
ஒட்டுநர் பயிற்சி — ஒரு வருடம்

கல்வித் தகைமை:
க. பொ. த. (சா.த.) வரை படித்திருத்தல் வேண்டும்.

### விஷேட கவனத்திற்கு

★ இல '4' தவிர்ந்த ஏனைய பயிற்சி நெறிகள் யாவும், மாணவர்கள் வெளிநாட்டுப் பரீட்சைகளை எதிர்கொள்ளத் தக்க வகையில், ஆங்கில மொழி மூலம், வேண்டிய தமிழ் விளக்கத்துடன் நடததப்படும்; இதற்கு ஏற்ப, பயிற்சிக் காலம் பூராவும் ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது.

★ இதர வசதிகள்:
1. நூலகம்
2. விடுதி (ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே.)
3. விளையாட்டுத்துறை

★ விண்ணப்பப்படிவம்: ரூபா 30

பெற்றுக் கொள்ளக் கூடிய இடம்:
"CLS" புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
"J. C. I. T" அலுவலகம் வட்டுக்கோட்டை.

விண்ணப்பப் படிவங்களை 14 — 02 — 1994க்கு முன் வட்டுக்கோட்டையில் கிடைக்கக் கூடியதாக தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கவும்.

★ போதியளவு மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.

**முக்கிய குறிப்பு**


The "Open University of Sri Lanka" (O U S L) has Granted EXEMPTIONS for the Technician Diploma Courses.

தொழில் நுட்ப டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின "பாடவிதான - விலக்கு" (Exemption) அளிக்கப்பட்டுள்ளது.

- DIRECTOR.

உ
சிவமயம்
விராட் விஸ்வப் பிரமனே நம

## 21 ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பு



### திருமதி கமலம்மா கந்தையா

அவர்கள்
(கொக்குவில் மேற்கு மணியர்பதி)

மலர்வு: 21 — 05 — 1904
உதிர்வு: 06 — 01 — 1994

அங்கையால் ஆனமட்டும் அள்ளிச் சொரிந்திட்டு
செங்கை சிவக்கச் சிரித்துநின்ற — சங்கை மிகு
நங்கையாய் வாழ்ந்து நானிலத்தில் புகழுற்ற
மங்கை கமலம்மா இவர்.

எங்கள் அன்புத் தெய்வமே,

குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வளர்த்து உற்றோரையும் மற்றோரையும் அணைத்தும் நேசித்தும் இனிதாகப் பேசி சிறப்போடு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (26 - 01 - 94) நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப் பிள்ளைகள்.

'துவாரகை'
56, பூநாறி மரம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(29110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
193/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உண்மை நிலை அறிவது எப்போது?

தமிழர் பிரச்சினை சம்பந்தமாகவும், [வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தம் தொடர்பாகவும் உள்ள பின்னணியையும் உண்மை நிலையையும் தெற்கில் உள்ள சிறு எண்ணிக்கையானோரே நன்றாக அறிந்துள்ளனர். பிரச்சினையை தமது பக்கத்தில் மட்டும் நின்று பார்க்காமல், நியாய சிந்தையுடன் நோக்குபவர்கள் கஞ்சிக்குள் பயறு போட்ட மாதிரியே உள்ளனர்.

ஆயினும் —

தமிழர் பிரச்சினை மற்றும் யுத்தம் சம்பந்தமான தமது கருத்துக்களைச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பும் துணிவும் சக்தியும் அவர்களுக்கு வரவில்லை. இருந்திருந்தாற் போல மட்டுமே அவர்கள் தமது கருத்துக்களை கூறி வருகின்றனர். அந்த வகையில் ஒன்றுதான் திரு. சுசில் விஜயசிறிவர்த்தனா யுத்தம் குறித்து வெளியிட்டிருக்கும் கருத்து.

திரு. சுசில் விஜயசிறிவர்த்தனா இலங்கை கலை, கலாசார மன்றத்தின் அமைப்பாளராவார். தெற்கின் ஏனைய புத்திஜீவிகளுக்கு முன்மாதிரியாக அவர் சமாதான மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் முன்னின்று நடத்துகிறார்.

ஸ்ரீலங்காவின் அரசாங்கங்கள் சிங்கள மக்களுக்கு மறைத்துவரும் ஒரு முக்கிய விடயத்தை அவர் துணிச்சலுடனும், பகிரங்கமாகவும் தெரிவித்திருக்கிறார். ஜே. ஆர். அரசு தொடக்கம், பிரேமதாசா அரசு உள்ளிட்டு, விஜேதுங்கா அரசு வரை வடக்கு-கிழக்கில் நடைபெறும் நடக்கும் போராட்டம் விடுதலை புலிகள் மட்டும் நடத்தும் ஒன்று எனவும் தமிழ் மக்களுக்கும் அதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றுமேகாட்டி வந்தன; காட்டுகின்றன.

விடுதலைப் புலிகள் என்ற போராட்டக் குழுவினர் தமிழர்களில் ஒரு சிறு குழுவினர் என்பது போலவும், தமிழ் மக்களின் ஆதரவின்றியே அவர்கள் போராடுகிறார்கள் என்பது போலவும் ஒரு பொய்மையான நிலையைச் சிங்கள மக்களுக்கு அரசாங்கம் காட்டி வருகிறது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக, அவர்களின் விடுதலைப் படையாக நின்றுதான் விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள்; யுத்த களத்தில் நிற்கிறார்கள். இந்த உண்மை சிங்கள மக்களுக்கு இயலுமான வரை மறைக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்தின் இந்தத்தில்லுமுல்லு நடத்தையையும், விஷமத் தனத்தையும் சிங்கள மக்களின் ஒரு சிலர் மட்டுமே கண்டு கொள்கின்றனர். தமிழ் மக்களின் ஆதரவின்றி, அவர்களின் அனுசரணை இன்றி, பக்கபலமின்றி போராட்டம் ஒன்றை விடுதலைப் புலிகளால் நடத்த முடியுமா என்பதனைப் பகுத்துணரும் விவேகம் கூட சிங்கள மக்களின் மிகப் பெரும்பாலானோருக்கு இல்லை என்பது கவலைக்குரியது.

விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்துகிறார்கள். அரசாங்கம் ஒன்றுக்கு எதிராக யுத்தம் செய்கிறார்கள். அரசாங்கத்தின் படைகளைத் தோற்கடிக்கிறார்கள். எந்த நாட்டின் உதவியுமின்றித் தமது கால்களில் நின்று போராடுகிறார்கள். நாலாவது வல்லரசாகக் கருதப்படும் இந்தியப் படையையும் தோற்கடித்தார்கள்.

அவை மட்டுமல்ல, தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கத்தின் ஆணை செல்லுபடியாகா வண்ணம் நிர்வாகத்தையும்நடத்துகிறார்கள். மக்கள் ஆதரவும், ஒத்துழைப்பும், பங்களிப்பும் இல்லாமல் இராணுவ, அரசியல் செயல்மானங்களை நடைமுறைப்படுத்த முடியுமா?

இவை குறித்துச் சற்று ஆழமாகச் சிந்தித்தால் அரசின் பொய்யையும், மூடிமறைப்பையும் கண்டு பிடித்து விடலாம். வடக்கு-கிழக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினை அல்ல. விடுதலைப் புலிகள் தமிழ் மக்கள் சார்பில் அவர்களுக்காகவே போராடுகிறார்கள் என்பது இலகுவில் சிங்கள மக்களுக்குப் புரிந்து விடும்.

# பொறுப்பில்லாது இயங்கும் மேலதிகாரிகளுக்கு எதிராக
# துப்பாக்கி நீட்டும் நிலையில் சாதாரண சிப்பாய்கள்

## யுத்த இயந்திரத்தில் மாற்றம் இன்றேல் பல பூநகரிகள் ஏற்படும்

*தொழில்சார் இராணுவம் ஒன்றை சட்டி எழுப்ப வேண்டிய தேவை — என்ற தலைப்பில் 'ராவண' கடந்த வார சண்டே ஐலண்ட் இதழில் எழுதிய கட்டுரையில் இருந்து......*

ஒரு யுத்தத்துக்கு தேவையான முக்கிய அம்சங்களில் ஒன்றான, பாதுகாப்பு, அதிகார பீடத்தின் ஆதரவை புதிய இராணுவத் தளபதி ஜெனரல் டி சில்வா பெற்றிருக்கிறார்.

இது முன்னாள் தளபதி சிசில் வைத்தியரத்தினாவுக்குக் கிடைக்காதிருந்தது

விடுதலைப் புலிகளுக்கு ஜெரி டி சில்வா பகிரங்கமாக சவால் விட்டுள்ளார்.

எதிரியின் இராணுவ வல்லமையை அழிக்கப்போவதாக சந்தேகமற அவர் கூறியிருக்கிறார்.

இராணுவத்தை தொழில்சார் (Professional Army) இராணுவமாக மாற்றப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதிய தளபதியின் கீழாவது இலங்கை இராணுவம் தொழில்சார் இராணுவமாக மாறவேண்டும் என்று மக்களும் வரியிறுப்பாளர்களும் அக்கறை கொண்டுள்ளனர்.

### ஜெரி டி சில்வா மீது அழுத்தம்

தொழில்சார் இராணுவமாக்குவதற்கான அத்திவாரத்தை புதிய தளபதி இடவேண்டும். பலனளிக்கக்கூடிய வழிகாட்டுதல்கள், படையினரை உறுதிபடைத்தவர்களாக மாற்றக்கூடிய ஊக்குவிப்பு வழங்குதல் மற்றும் கொள்கைகள், நடைமுறைகளை உருவாக்குவதில் புதிய தளபதி ஈடுபடவேண்டும். அப்படியானால்தான் குறைந்தது அடுத்த பத்தாண்டுகளிலாவது தீவிரவாதத்தை இலங்கை அரசினால் அழிக்கக் கூடியதாக இருக்கும்.

ஆகவே இராணுவத்தை தொழில்சார் இராணுவமாக மாற்றுவதற்கு தேவையான முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்கு புதிய தளபதியை அரசியல். இராணுவ தலைமைத்துவங்கள் அனுமதிக்கவேண்டும்.

எப்படியாயினும்—

நாட்டின் பாதுகாப்பு அதிகாரபீடம் கடந்த வாரம் மேற்கொண்ட சில முடிவுகள் புதிய தளபதி ஜெரி டி சில்வா மீது அழுத்தம் கொடுக்கப்படுவதை கோடி காட்டியுள்ளது

யுத்தம் நடத்தும் இராணுவமாக மாற்றுவதற்கு முதலபடி இராணுவத் தலைமைத்துவத்தின் தரத்தை அதிகரிப்பதுதான்

### சரியான தளபதிகள் இல்லை

இரண்டு தசாப்தங்களாக தமிழர் தீவிரவாதத்தை எதிர்த்து சண்டையிட்ட பின்னர் இராணுவத்துக்கு உள்ளேயிருப்பவர்களும் வெளியே இருப்பவர்களும், சரியான தளபதிகள் இல்லாமையால் தான் இராணுவம் தோற்றது என்று உணருகின்றார்கள்.

ஆகவேதான் இலங்கை இராணுவத்துக்கு சரியான தலைவர்கள் தேவை என்பது அவசரமாகின்றது.

நாடு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும்போது கடும்போக்காளரையே இராணுவத்துக்கு தலைமை வகிக்க விடவேண்டும்.

சரியான இடத்தில் சரியானவர்கள் வைக்கப்படாதால் தான் இலங்கைப் படையினர் பெரிய பின்னடைவுகளை சந்தித்தனர்.

பூநகரி மற்றும் ஜானகபுர (மண்கிண்டிமலை) பேரழிவுகளை ஆய்வு செய்தவர்கள் இதனை தெளிவாக புரிந்து கொள்வார்கள்.

யுத்த அனுபவமே இல்லாதவர்களின் மேற்பார்வையில் தான் இம்முகாம்கள் இருந்தன. இவர்களுக்கு எதிரியைப் பற்றியோ எதிரியின் உளவியல் தொடக்கம் அவனின் உத்திவரை ஒன்றுமே தெரியாதிருந்தது. இவர்கள் புத்தகத்தில் உள்ள இலகுவான வழிகாட்டுதல்களையோ அல்லது இராணுவத் தலைமையகம் விடுத்த 17 பணிப்புரைகளையோ பின்பற்றத் தவறிவிட்டனர். பூநகரி அறிக்கை இதனை தெளிவாகக் காட்டுகிறது.

படையினரின் பலவீனங்களை எதிரி அறிந்து, வெற்றிகரமாக தாக்குதல்களை நடத்தி, படையினருக்குப் பலத்த சேதங்களை ஏற்படுத்தினர்.

### இந்திய இராணுவத்தின் தரம்

இராணுவத் தலைமைப் பீடத்தில் தகுதியானவர்கள் இடம் பெறவேண்டும்; பலவீனமானவர்களுக்கும் அர்ப்பணிப்புச் செய்யாதவர்களுக்கும் இடமளிக்கக் கூடாது.

இந்திய இராணுவத்தில் மேஜர் பதவிக்கு மேற்பட்ட பதவிகளில் நியமனம் பெறுவதற்கு பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும். அப்பரீட்சையில் சித்தியடையாதோரை மேஜர் பதவியுடன் ஓய்வு பெறச் செய்து விடுவார்கள். அப்படியான போட்டிப் பரீட்சைகள் இலங்கையில் முப்படைகள் மற்றும் பொலிஸிலும் கிடையா.

பதவி உயர்வு வழங்குவதற்கு முன்னர் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் தகுதியை மதிப்பிட பிரமாணம் ஒன்று இருக்கவேண்டும்.

பதவி உயர்வுபெற விண்ணப்பித்துள்ள அதிகாரிமூன்று தீவிரவாத கிளர்ச்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவரா?

முதலாவது ஈழம் யுத்தம், ஜே. வி பி. கிளர்ச்சி, இரண்டாவது ஈழம் யுத்தம் ஆகியவற்றின் போது எங்கு சேவையாற்றினார்கள் என்ற கேள்வி அவர்களிடம் கேட்கப்பட வேண்டும்.

பதவி விலகிய தளபதி கண்ட தோல்விகளில் இருந்து புதிய தளபதி பாடம் படிக்க வேண்டும்.

யுத்த முனையில் திறமை காட்டியவர்களுக்கு பதவி உயர்வு வழங்க சிசில் தவறிவிட்டார். அழுத்தம் கொடுக்கும் குழுக்களினால் புதிய தளபதி பலவீனப்படுத்தப்படக் கூடாது. அக் குழுக்களைச் சேர்ந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படக்கூடாது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக அரசியல், இராணுவத் தலைமை அதிகார பீடங்கள் விட்ட தவறுகளுக்கு இலங்கை இரத்தத்தை விலையாகக் கொடுத்து உள்ளது

யுத்த இயந்திரத்தில் தீவிர மாற்றங்களை ஏற்படுத்தாவிடின் இலங்கை தொடர்ந்து 'பூநகரி'களை விலையாகக் கொடுக்க நேரிடும்.

இதனால் ஏற்படும் விரக்தி, பொறுப்பில்லாமல் நடந்த மேலதிகாரிக்கு எதிராக துப்பாக்கியை நீட்டக் கூடிய அளவுக்கு சாதாரண சிப்பாயை அவசரப்படுத்தி விடமுடியும்.

வட பகுதியில் உள்ள ஒரு படை முகாம் மீதே விடுதலைப்புலிகளின் அடுத்த தாக்குதல் இருக்கும் என்பது திடமான உண்மையாகும்

இரண்டாவது ஈழம் யுத்தம் ஆரம்பமானதைத்தொடர்ந்து இராணுவ முகாம்களை, ஒன்றன் பின் ஒன்றாக விடுதலைப் புலிகள் கைப்பற்றி வந்துள்ளனர்.

### பூநகரியில் படித்தபாடம்?

பூநகரியில் இருந்து நாம் படித்த பாடம் என்ன?

கொழும்பிலுள்ளவர்களின் நினைவாற்றல் குறைவாகும். ஆனால் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த படைமுகாம்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது - கொக்காவில், மாங்குளம், கட்டைக்காடு, ஜானகபுர, பூநகரி.

விடுதலைப் புலிகள் இயக்கம் தினமும்வளர்ச்சிஅடைந்து வருகிறது. 1974 இல் 4 ஆக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் எண்ணிக்கை 1979 இல் 22 ஆகி 1983 இல் 40 ஆகி 1987 இல் 6 ஆயிரம் ஆகி இன்று 12 ஆயிரமாக வளர்ந்துஉள்ளது.

விடுதலைப் புலிகளின் தரைப்படைகள், கடற்படைகள் இலங்கை காலாட் படை மற்றும் கடற்படை ஆகியவற்றைச் சந்திக்கக் கூடிய திறமை பெற்றவையாக வளர்ந்துள்ளன.

யுத்த முனையில் திறம்படச் செயலாற்றியவர்களை செயற்பாட்டுப் பகுதிகளுக்கு நியமனஞ் செய்வதே இலங்கை தப்பிப் பிழைக்க இருக்கும் ஒரே வழியாகும். ஒவ்வொரு யுத்தத்தின் பின்னரும் விடுதலைப் புலிகளின் யுத்த சன்னதத்துக்கு வெறுமனே பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது அதனை இனியும் நாடு தங்காது

போர் முனையில் இராணுவம் முன் முயற்சி எடுக்க வேண்டும். தினமும் பலம்பெற்று வரும் எதிரியை போர் முனையில் சந்தித்து பலவீனப்படுத்த வேண்டும்.

ஆனால் தலைவர்களால் அதற்கு வழிநடத்த முடியுமா?

### பதவி உயர்வில் பாரபட்சம்

அண்மையில் இடம் பெற்ற பதவி உயர்வுகளைப் பார்க்கும் போது ஒரே ஒருவர் மட்டுமே தகுதியானவராக உள்ளார். சிலர் தலைமையகத்தில் அலுவலக அதிகாரியாக நியாயமான காலத்தை செலவிட்டவர்கள். நிச்சயமாக அவர்கள் யுத்த முனை நியமனங்களுக்கு பொருத்தமற்றவர்கள்.

அண்மைக் காலத்தில் அரசியல் வாதிகள் உறுதி மொழிகள் கொடுத்து வந்திருந்தும்.

அண்மையில் செய்யப்பட்ட மூன்று நியமனங்கள் சேவை மூப்பின்படியே வழங்கப்பட்டுள்ளன; திறமை அடிப்படையில் அல்ல.

இப்போது பாதுகாப்பு வட்டாரங்களில் உள்ளபலர் இப்படிச் கேட்கின்றனர்: ''நாம் ஏன் எம் உயிரை பணயம் வைக்க வேண்டும்? எப்படியாயினும் எமக்குப் பதவி உயர்வு கிடைக்கும் தானே!'' என்று.

வேறு சிலர் கேட்கின்றனர். ''கொழும்பில் இருப்பதே சிறந்தது. குளுகுளு அறையில் பணிபுரிந்த வண்ணம் குடும்பத்துடன் இருக்கலாம் சரியான நேரம் வரும் போது பதவி உயர்வு கிடைக்கும்''.

யுத்த முனைக்குச் சென்று பிரபாகரனைக் கொல்ல வேண்டும் என்று பிரிகேடியர்கள் தங்களுக்குள் சண்டை பிடிக்க வேண்டிய நேரத்தில், இந்நியமனங்கள் இந்த அளவு ஒழுக்கச் சிதைவை படையினர் மத்தியில் அதிகரித்துள்ளன.

பாதுகாப்பு அதிகாரபீடத்தின் இந்த முட்டாள்தனத்தினால் பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் கூறுகிறார்.

''இராணுவத்தில் சேருபவர்கள் பற்றி நான் கவலைப்படுகிறேன். நாடு குறித்து கவலைப்படுகிறேன். கொள்கை வகுப்பாளர்களையும் தீர்மானம் எடுப்பவர்களையும் நான் திட்டுகிறேன்''

இதன் அர்த்தம் தெளிவானது.

இதுவரை புதிய தளபதியின் நோக்கம் இராணுவத்தை மையமாகக் கொண்டுள்ளதே தவிர, தனிப்பட்டவர்களை அடிப்படையாகக் கொண்டதாக இல்லை.

கடந்த காலத்திலும் பார்க்க இப்போது நாட்டு மக்கள் இராணுவம் போன்ற தேசிய அமைப்புக்கள் குறித்து தீர்ப்புக் கூறுபவர்களாக மாறியுள்ளனர். பாதுகாப்பு இல்லாத பொருளாதார அபிவிருத்தி பயனற்றது. படைத் தளபதிகள் எடுக்கும் ஒவ்வொரு முக்கிய தீர்மானமும் மக்களினால் நுணுக்கமாக பரிசீலிக்கப்படும்.

முக்கிய போராளியும் கணக்கிட்டு செயல்படும் தலைவருமான திரு.வே. பிரபாகரன் சொல்கிறார்:-

''நாம் தமிழ்ஈழம் கொள்கையைக் கைவிடுவதானால் மாவீரர்களின் ஆத்மாக்கள் வந்து எம்மை கேட்டுக் கொண்டே இருக்கும்''

### புதிய தளபதியின் பொறுப்பு

தமது படையினருக்காக அரசியல் மற்றும் அதிகார பீடத்துடன் சண்டைபிடிக்க வேண்டியது புதிய தளபதியின் பொறுப்பாகும்.

1983 க்குப் பின்னர் இராணுவம் தனது அரிய தளபதிகளை இழந்தது. கொப்பேகடுவ, விஜயவிமலரத்னா, லக்கிவிஜேரததினா, அவர்களில் அடங்குவர்.

இன்று அவர்களைப் போன்ற திறமையுள்ளவர்கள் ஒரு சிலர் மட்டுமே இராணுவத்தில் உள்ளனர்.

இச் சிலரின் சாதனைகளுக்கு உரிய சன்மானத்தை வழங்க அரசியல் மற்றும் இராணுவத் தலைமைகள் தவறுமானால் அவர்கள் இராணுவத்தை விட்டு வெளியேற நேரிடும்; அல்லது பின் ஆசனத்தில் இருந்து நாடு அவஸ்தைப்படுவதைப்பார்த்துக் கொண்டிருப்பர்.

(இ-எ)

உ
கீரிமலை வீதி - சித்தன்கேணி
ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
ஆலய
கும்பாபிஷேக தின
மணவாளக்கோலம்

காலம்: இன்று (26-01-1994)
புதன்கிழமை

காலை 108 கலச சங்காபிஷேகமும்
மாலை பூந்தண்டிகை உற்சவமும்

மாலை 5 மணி தொடக்கம் ஒரே மேடையில்
மேளக்கச்சேரிகள் நடைபெறும்

நாதஸ்வரம்
N. K பத்மநாதன்
கானமூர்த்தி
பஞ்சமூர்த்தி
சிதம்பரநாதன்
கேதீஸ்வரன்
N. R. கோவிந்தசாமி-
புதல்வர்கள்
சுந்திரன்
பாலசுப்பிரமணியம்
சிவதாஸ்
சோமசுந்தரம்
மற்றும்
சித்தன்கேணி நாதஸ்வர
இளைஞர்கள்

தவில்
உதயசங்கர்
நித்தியானந்தம்
N R சின்னராசாவின்-
புதல்வர்கள்
முருகதாஸ்
ஜெயராமன்
மற்றும்
சித்தன்கேணி தவில்
இளைஞர்கள்

இவ்விழாவில் ஆலய குருக்களுக்கும், தாயாருக்கும்
சுழிபுரம் (அளவெட்டி) சின்னகணேஷ் தவில்
வித்துவானுக்கும்
கோவில் மேளம் உலகநாதனுக்கும்
மற்றும்
சித்தன்கேணியில் வாழ்ந்து காலஞ்சென்ற தவில்
வித்துவான்கள் நாதஸ்வர வித்துவான்களினது
புதல்வர்களுக்கும்
காலஞ்சென்றவர்களின் நினைவாகப்
பாராட்டி தங்கப்பதக்கம் வழங்கப்படும்
பிரசங்க பூஷணம் சுழிபுரம் சிவசண்முகமூர்த்தி
அவர்களுக்கும்
பாராட்டு விழா நடைபெறும்.

- மணவாளக்கோல உபயகாரர்.
26-01-1994 [29105]

இந்தியாவிலுள்ள

# காஷ்மீர் மாநிலம் விரைவில் பாகிஸ்தானின் வசமாகும்!

## பெனாஸிர் பூட்டோ சொல்கிறார்

இஸ்லாமபாத், ஜன. 26

இந்தியாவில் உள்ள காஷ்மீர் மாநிலம் முழுவதும் விரைவில் பாகிஸ்தானின் ஒரு பகுதியாகி விடும்.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ முன் கண்டவாறு தெரிவித்தார்.

காஷ்மீரில் இந்தியாவில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த இந்தியா அனுமதித்தால், அம்மாநில மக்கள் பாகிஸ்தானுடன் சேரவே வாக்களிப்பார்கள் என்றும் திருமதி பூட்டோ கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

46ஆவது இந்தியக் குடியரசு தினத்துக்கு முதல் நாள் பாகிஸ்தான் பிரதமர் இப்படி பேசியது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்று பி.பி ஸி. செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

பெனாஸிரின் இப்பேச்சு முட்டாள்தனமானது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் வர்ணித்தார். தமது அரசியல் எதிரிகளின் அழுத்தம் காரணமாக இப்படி முட்டாள்தனமாக பெனாஸிர் பேசியிருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காஷ்மீர் தொடர்பான பேச்சுக்களை பாகிஸ்தானுடன் இந்தியா தொடர்ந்து நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

## விவசாய கருத்தரங்கு

நாளை வியாழக்கிழமை காலை 8-30 மணியளவில் மன்னார் மாவட்ட பெரிய பண்டிவிரிச்சான் அ. த. க. பாடசாலையில் விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது.

மன்னார்மாவட்ட விவசாய அபிவிருத்தி 93/94 காலபோக விவசாய இலக்குகளின் முன்னேற்றம், வதிவிட வேளாண்மையை ஊக்குவித்தல், கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம் ஆகிய விடயங்கள் விசேடமாக ஆராயப்படவுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளனர். (க)

## கோடரி வெட்டு முதியவர் பலி

மாமன்—மருமகன் தகராற்றின் எதிரொலியாக மாமன் கோடரி வெட்டுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

நேற்று மாலை 5 மணியளவில் மானிப்பாய் ஆலடி சந்தியில் நடந்த இச் சம்பவத்தில் சின்னவி நாகமணி [67 வயது] என்பவர் மரணமானார்.

அவரின் மருமகன் இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

[இ-15-ரி]

## மூவர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

அந்த கராஜில் வேலை செய்யும் சுப்பிரமணியம் ப்ரேமதாஸன் (வயது 22)— ஆனைக்கோட்டை, நவரத்தினராசா பரணீதரன் (வயது 15) — ஆனைக்கோட்டை, பரமசாமி பாக்கியராசா (வயது 9) — யாழ்ப்பாணம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

(இ-15)

## அரசியல்தீர்வு .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் பயங்கரவாத வழிமுறைகளைக் கடைப்பிடித்தாலும் அதன் பலமும், திறமையும் அவர்களது அரசியல் விவகாரங்கள், போராட்ட இலட்சியங்களில் இருந்தே பிறக்கின்றன. இவற்றில் தமிழ் மக்களில் மிக அதிகமானோர் தங்களை ஈடுபடுத்தி உள்ளனர் —

வடக்கு - கிழக்கில் நடத்தப்படுவது கெரில்லா முறை ஆயுதப் போராட்டமாகும். அந்த முறையான யுத்தத்தை வெல்வது கடினம்— என்றும் முக்கியஸ்தர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கின் எல்லை விவகாரம், அதிகாரப் பகிர்வு முறையின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் அதிகாரத்தின் அளவும், தன்மையும் ஆகிய இரண்டு விடயங்களைச் சரியான முறையில் அணுகினால் அரசியல் தீர்வு ஒன்றைக்காண முடியும் என்று அந்த யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களைப் போன்று வழங்குவதன் மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காணலாம் என்றும் முக்கியஸ்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எல்லாச் சமூகத்தினரும் ஏற்கக்கூடிய, பிரமுகர்களைக் கொண்ட குழு ஒன்றை மத்தியஸ்த பணியில் ஈடுபட வைக்கலாம் என்று —

அந்தக் குழுவுக்கு அரசியல் தீர்வுக்கான சாத்தியமான வழிகளைக் கைக்கொள்ள ஜனாதிபதி சம்மதம் தெரிவிக்கவேண்டும் என்றும் —

அந்தக்குழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் அந்த யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கில் விடுதலைப் புலிகளைச் சம்பந்தப் படுத்தி தலைவர் பிரபாகரனை ஒப்படைக்க அல்லது நாடு கடத்துமாறு இந்திய அரசு அழுத்தம் தருவதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுடன் பேசினால் இப்போதைய நிலையை மாற்ற முடியும் என்ற அடிப்படையிலேயே முக்கியஸ்தர்கள் தமது யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர். (அ)

குப்பையைப் புதைத்தவன் கோபுரம் கட்டுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
## பழைய மாணவர் சங்க
## வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் **20-02-1994** (ஞாயிறு) காலை **9 00** மணிக்கு திரு. கா. சோமசுந்தரம் அவர்களுடைய தலைமையில் யூனியன் கல்லூரி தற்காலிகமாக இயங்கும் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

சென்ற பொதுக்கூட்டத் தீர்மானத்தின் படி ஆயுள் சந்தா செலுத்தியவர்களே சங்க உறுப்பினர்கள் ஆவார்கள்.

ஆயுள் சந்தா கட்டிய அங்கத்தவர்கள் பட்டியல் யூனியன் கல்லூரி அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் 15-02-1994க்கு (செவ்வாய்) முன்னர் ரூபா 100/- பொருளாளர் திரு. வே. தேவதாசனிடம் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 15-02-94க்கு (செவ்வாய்) முன்னர் எழுத்து மூலம் செயலாளருக்கு தரும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

செ. றொ. யேசுபாலன்
செயலாளர்

ஆனந்த அவனியூ,
உடுவில்,
சுன்னாகம்.
[29113]

## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை பரராசசிங்கம்
(நயினாதீவு)

நயினை 2ஆம் வட்டாரம் ஐயாத்துரை பரராசசிங்கம் 25-01-94 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - தையல்முத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சின்னப்புசின்னம்மா தம்பதியரின் மருமகனும், பதுமாதேவியின் அன்புக் கணவரும், ஜீவேந்திரன் [சுவிஸ்], மோகேந்திரன் [கனடா - முன்னாள் ஆசிரியர், மண்டைதீவு மகாவித்தியாலயம்], யோகேந்திரன் [மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி A/L 92 வர்த்தகம்] ஆகியோரின் தந்தையும், திருமதி ஜீவேந்திரனின் [சுவிஸ்] மாமனாரும், செவின், செல்வி [சுவிஸ்] ஆகியோரின் பேரனும், மகேஸ்வரி, மகாலிங்கம் (GTC கொழும்பு), பரமேஸ்வரி, இராஜேஸ்வரி [பிரான்ஸ்] ஆகியோரின் சகோதரனும், தனபாலசிங்கம் [வர்த்தகர், நயினாதீவு], சண்முகரெத்தினம் [குமாரவேல் கொம்பனி, கொழும்பு], திருச்செல்வம் [பிரான்ஸ்], நேசலட்சுமி [அவுஸ்திரேலியா], விமலாம்பிகை [கனடா], தையல்நாயகி, நடேசபிள்ளை [உதவிக் கல்விப் பணிப்பாளர்], வேல்முருகோன்பிள்ளை [நிர்வாக அலுவலர், யாழ். கச்சேரி], சோமேஸ்வரபிள்ளை [பிரதி அதிபர், நாவலர் மகாவித்தியாலயம்], சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று புதன்கிழமை மாலை 3 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. பதுமாதேவி
[மனைவி]
ப. யோகேந்திரன்
[மகன்]

42, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.
[சி/7047]

### நடராசா கனகபவன்
(குஞ்சாம்பி)

கொக்லன்கலட்டி நடராசா கனகபவன் (குஞ்சாம்பி) காலமானார். இவர் வரதாட்சினியின் கணவனும், தில்ரூபா, வித்தியாசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சின்னத்தம்பி கனகேஸ்வரி, கனகேஸ்வரன், காலஞ்சென்ற கனகச்சந்திரன், திருமதி கனகராணி ஜெயவர்த்தனா மற்றும் கனகசேகரன், கனகரஞ்சிதன், கனகசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 23-01-94 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது நீதிமன்ற வீதி, மல்லாகம் வசிப்பிடத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

உடன் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

தகவல்:
ந. கனகசேகரன்.
(சகோதரன்)

(6922)

### பொன்னையா சிவகுரு
(பெருங்குடி விவசாய மன்னன், 7ஆம் வாய்க்கால், கிளிநொச்சி)

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த பொன்னையா சிவகுரு (24-01-94) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சாந்தநாயகி, இராசநாயகி, செல்வநாயகி (கனடா), வேதநாயகி, காலம் சென்ற தெய்வநாயகி, சற்குணநாயகி (கனடா), யசோதரன், குணநாயகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விநோகரன், இராசலிங்கம், மனோகரன் (கடனா), பரம்சோதி (கனடா), பாக்கியராசா (கனடா), பாக்கியநாதன் ஆகியோரின் மாமனாரும் சுரேஸ் (சுவிஸ்), ரமேஸ் (கனடா), சுகந்தினி, சுதர்சினி, விஜயயாழினி, சுபேந்திரன், பார்த்திபன், சங்கர் (கனடா), பிரசாத் (கனடா), பிரகாஸ் (கனடா), பிரதீபா (கனடா), சோபனகாந் (கனடா), சுஜன் (கனடா), ஜீவிசா ஆகியோரின் அன்புப் பேரனும், பொன்னையா குமரேசுவின் சகோதரரும், குமரேசு செல்லம்மாவின் மைத்துனரும், கந்தசாமி சறோஜினிதேவி, தங்கராசா சகுந்தலாதேவி ஆகியோரின் சிறிய தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சாவகச்சேரி வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் (26-01-94) இன்று புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்:
சி. யசோதரன்
(மகன்)

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.
(29103)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-01-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01 — 01 — 1915



உதிர்வு: 26 — 01 — 1993

அமரர்
### சீமாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய அஞ்சலக ஊழியர் கரவெட்டி)

''சீவியத்தில் அன்பு செய்து எல்லோரையும் நேசித்தீர் மரணத்திலும் உங்களை மறக்க மாட்டோம்''

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 26-1-94 புதன்கிழமை காலை 6 00 மணிக்குப் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இதில் பங்கு பற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுவீர்களாக.

இவரின் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள், மைத்துனர்மார்,
உற்றார், உறவினர் நண்பர்கள்

''ராஜ் மகால்''
கன்பொல்லை வீதி,
கரவெட்டி.
(சி/7131)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
25 — 08 — 1932

இறப்பு:
05 — 02 — 1993

திதி:
26 — 01 — 1994



### அரியதட்டி நல்லையா

ஆண்டொன்று சென்றாலும் அன்புமுகம்
மாறுமோ கருணையின் வடிவாய்
அன்போடெம்மை அரவணைத்த ஐயா
எப்போ உங்கள் முகம் காண்போம்.
உங்கள் குரல் கேட்போம் ஐயா
உங்கள் பிரிவால் வாடும்,

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஏழாலை மத்தி,
ஏழாலை
(6783)

## நீங்காத நினைவின் ஓராண்டு

தோற்றம்: 29 — 05 — 1919



மறைவு: 07 — 02 — 1993

நாதசுர சக்கரவர்த்தி, லலிதஸ்வர நாதபூபதி
### ஸ்ரீலஸ்ரீ பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை

ஆண்டு ஒன்று மறையுது தலைவ! உம் அன்பு மீண்டும் மீண்டும் நெஞ்சில் நிறையுது உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

எமது குடும்பத் தலைவனின் முதலாவது ஆண்டுத்திவசம் நாளை (வியாழக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறவிருக்கிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

பலாலி வீதி, உரும்பிராய். (சி-7132) — குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 26
மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்துள்ள உளவளத் துணைப் பயிற்சி நெறி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ-3)

★ ★ ★

சுன்னாகத்தில் பூபால கிருஷ்ண ஆச்சிரமம் இன்று காலை எட்டு மணிக்கு வலி. தெற்கு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது. (இ-89)

★ ★ ★

இடம்பெயர்ந்த பன்னாலை சேர். கனகசபை அ. த. க. பாடசாலை இன்று முதல் உடுவிலில் உள்ள தான்சன் கல்வி நிலையத்தில் காலை நேரத்தில் இயங்கவுள்ளது. (இ-89)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 26
சைவப் புலவர் வித்துவான் திரு. வ. செல்லையா எழுதிய ''இறைநாம அர்ச்சனை — போற்றித் திரு. அகவல்'' நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் வேலைக்கை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும்.

மேற்படி ஆலய தர்மகர்த்தாவும் யாழ். சைவ பரிபாலன சபைத் தலைவருமான திரு. சிவ. இராசேந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவில் வலி. தென்மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. க. சந்திரராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்ப்பாணம் உயர்கலைக் கல்லூரி அதிபர் திருமதி ச. அருள்நங்கை நூல் ஆய்வுரையையும் மொழித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. வ. சிவராசசிங்கம் நூல் நயவுரையையும் நிகழ்த்துவார்கள். (க)

## இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஜன. 26
யாழ். ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப் படவிருக்கும் நோயாளி ஒருவருக்கு ''ஓ'' நெகட்டிவ் இரத்தம் தேவைப்படுவதாகவும் — இரத்தம் கொடுக்க விரும்புபவர்கள் ''சஞ்சீவி'' அமைப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## 'படிப்பு' நூல் வெளியீட்டுவிழா

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு பீ. கே. பாலசிங்கம் எழுதிய ''படிப்பு'' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் சுடர் இ. மகேந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவில் அறிஞர்களின் அறிவுரைகள் இடம்பெறும். (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ். ரோட்டரக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் இன்று பிற்பகல் 5 மணி முதல் 5-30 மணி வரை சுண்டிக்குளி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் மேசைப் பந்தாட்டம் நடைபெறும். (த)

★ ★ ★

எச். என். பி. வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியில் ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:

★ 3 மணி; பல்கலைக்கழக ஆண்கள் அணி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.

★ 4-15மணி; ஜொனியன்ஸ் கறுப்பு அணி எதிர் பற்றிஷியன் கோல்ட்ஸ் அணி.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 26
யாழ். மிட்ரவுண் றோட்டரக்ட் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3மணிக்கு பாசையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மோதும் கழகங்கள் வருமாறு:-

★ யங் ஹென்றீஸ் வி. க. அணி எதிர் ஸ்கந்தா வி. க. அணி.

★ பாடும்மீன் வி. க. அணி எதிர் சென். நிக்கலஸ் வி. க. அணி. (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் ப. யோகேந்திரனின் தந்தையார்
### பரராசசிங்கம்

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— நண்பர்கள்
[சி/7133]

## கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் சனசமூக நிலையத்தின் (பிரம்படி) செயலாளர் ப. யோகேந்திரன் அவர்களின் தந்தையார்
### ஐ. பரராசசிங்கம்

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த துயரமடைகிறோம். அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறோம்.

— நிலையத்தினர்.
(சி-7048)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 23 — 06 — 1925



அம்பாள் அடியில்: 05 — 02 — 1993

அமரர்
### வேலுப்பிள்ளை மூத்துக்கிருஷ்ணர்
(மாயவர்)
(அச்சு இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்)

திதி: **26-01-1994**

ஐயா!
பன்னிரண்டு திங்களாய் நின்பாசமுகம் காணாது
பரிதவித்து நிற்கின்றோம்
எம்மிதயம் தன்னை நின் நினைவு வாட்டுதுவே
உம் இனிய குரலதுவும் எம் காதில் ஒலிக்கிதுவே
அன்புடனே எங்களுக்கு ஆறுதல் தான் கூறியுமே
கண்மணியே ஐயா எம் கலிதீர்க்க வாராயோ!
ஐயா!
ஆண்டொன்று ஆகியென்ன ஆயிரம் தான்
ஆனாலென்ன
அன்பே உன் நினைவலைகள் நித்தமும் ஒளிர்ந்திடும்
எம் மனதில்

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காளி கோவிலடி,
மல்லாகம்.
(சி/7130)

## மரண அறிவித்தல்

### அருணாசலம் நடராசா ஐயர்
(பூபாலர்)
உரும்பிராய் மேற்கு

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்தவரும் கொழும்புத்துறை ஐயனார் கோயில் பூசகருமான அருணாசலம் நடராசா ஐயர் (பூபாலர்) நேற்று (25-01-94) செவ்வாய் அதிகாலை காலமானார்.

இவர் அருணாசலம் இரத்தினம் தம்பதியினரின் அருமைப் புதல்வரும், பாலாம்பிகையின் அருமைக் கணவரும், அன்னபூரணம், அன்னலட்சுமி, அருளாம்பிகை, வரதராசன், நவராசன் ஆகியோரின் பிரியமுள்ள தந்தையுமாவார்.

அன்னாரின் சமாதிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை உரும்பிராயில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
வரதராசன்
(மகன்)

கருணாகரப்பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய்
(29111)